கர்நாடகாவில் கோர விபத்து

கார்-பஸ் மோதி தீப்பிடித்து 6 பேர் உடல் கருகி பலி

கார், பஸ்சில் பற்றி எரிந்த தீயை தீயணைப்பு வீரர்கள் அணைத்த காட்சி.

கர்நாடகாவின் யாத்கிரியில் இருந்து ராய்ச்சூரை நோக்கி ஒரு கார் சென்று கொண்டிருந்தது. காரில் 8 பேர் இருந்தனர். கார் இன்று காலை சுராபூர் தாலுகாவில் உள்ள தேவாபூர் அருகே வந்தபோது எதிரே பெங்களூரு வில் இருந்து கலபுரகி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு தனியார் பேருந்து மீது மோதியது.

இந்த மோதலால் கார் தீப்பற்றி எரிந்தது. பஸ்சிலும் தீ பிடித்தது. உடனடியாக தீயணைப்பு பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இந்த கோர விபத்தில் காரில் வந்த 6 பேர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியானார்கள். 2 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போலீசார் வழக்கு பதிவு செய்து பலியானவர்கள் யார்? யார் என்று அடையாளம் காண முயற்சித்து வருகின்றனர். மேலும் விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

முன்னோர்களுக்கு தர்ப்பணம்

சித்திரை அமாவாசையை முன்னிட்டு இன்று சென்னை, மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குளம் பகுதியில் பொதுமக்கள் ஏராளமானோர் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதை படத்தில் காணலாம்.

மது அருந்த சென்றபோது

லாரி டிரைவரை வழிமறித்து குத்திக்கொன்ற கும்பல்

செல்போனை பறித்து, தோப்புக்கரணம் போட வைத்து கொடூரம்

திருமயம், ஏப்.17–

சிவகங்கை மாவட்டம் ஆத்தங்குடி ஆரோக்கியபுரம் பகுதியைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி மகன் லோகு என்ற லோகநாதன் (வயது 23). இன்னும் திருமணமாகாத அவர் அதே பகுதியில் லாரி டிரைவராக வேலை பார்த்து வந்தார். மது குடிக்கும் பழக்கம் கொண்ட அவர் நேற்று இரவு பணியை முடித்துவிட்டு திருமயம் மலைக்குடிப் பட்டி பகுதியில் உள்ள டாஸ்மாக் கடைக்கு தனது நண்பர்களுடன் சென்றார்.

பின்னர் அங்கு மது வாங்கி விட்டு, அங்குள்ள கண்மாய் பகுதிக்கு சென்று கொண்டிருந்தார். வழியில் கோணப்பட்டு விலக்கு பகுதியில் சென்றபோது, எதிரே காரில் வந்த திருமயம் துலையானூர் பாப்பாத்தி ஊரணி பகுதியை சேர்ந்த சதீஷ்குமார் (30) மற்றும் அவரது நண்பர்கள் வழி மறித்தனர்.

திடீரென்று லோகநாதனுடன் தகராறில் ஈடுபட்ட அந்த கும்பலை சேர்ந்தவர் கள், முதலில் செல்போனை பறித்துக்கொண்டனர். இதைப்பார்த்த லோகநாதனின் நண்பர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர். தொடர்ந்து லோகநாதனை சதீஷ்குமார், தனது நண்பர் கள் முன்னிலையில் தோப்புக்கரணம் போட வைத்தது டன் அவரை சரமாரியாக தாக்கியுள்ளார்.

அவர்கள் பிடியில் இருந்து தப்ப முயன்ற லோகநாதனை அந்த கும்பல், தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக கழுத்து, கால் உள்ளிட்ட இடங்களில் குத்தினர். இதில் நிலைகுலைந்த லோகநாதன் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக இறந்தார்.

கொலையுண்ட லோகநாதன்

இதையடுத்து கொலை கும்பல் தாங்கள் வந்த காரில் ஏறி அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

அந்த வழியாக சென்றவர்கள் லோகநாதன் கொலை செய்யப்பட்டு கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்து உடனடியாக திருமயம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் விரைந்து சென்ற போலீசார் லோகநாதன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து தப்பிச்சென்ற சதீஷ்குமார் உள்ளிட்டவர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள்.

இதில் முக்கிய குற்றவாளியான சதீஷ்குமார், கனிமவள கொள்ளைக்கு எதிராக போராடிய ஜகபர் அலி கொலை வழக்கில் இரண்டாவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ள ராசு என்பவரது மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்

பிரதமர் மோடி வருகையால் கோவையில் பலத்த பாதுகாப்பு

டிரோன்கள் பறக்க தடை-போக்குவரத்து மாற்றம்

கோவை, ஏப்.17–

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி பிரசாரம் செய்து வருகிறார். கடந்த 15–ந் தேதி நாகர்கோவிலில், கன்னியா குமரி, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் பிரசாரம் மேற்கொண்டார்.

இந்த நிலையில் பிரதமர் மோடி பிரசாரத்திற்காக மீண்டும் நாளை தமிழகம் வருகிறார். கோவை கொடிசியா மைதானத்தில் நாளை மாலை 5 மணிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

பொதுக்கூட்டம்

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நாளை டெல்லியில் இருந்து விமானம் மூலம் மாலையில் கோவை விமான நிலையத்திற்கு வருகிறார்.

பின்னர் அங்கிருந்து கார் மூலமாக கொடிசியா செல்லும் பிரதமர் மோடி அங்கு நடக்க கூடிய பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

கூட்டத்தில், கோவை மாவட்டத்தில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர்கள் மற்றும் கோவை வடக்கில் போட்டியிடும் வானதி சீனிவாசன், அவினாசியில் போட்டியிடும் மத்திய மந்திரி எல்.முருகன் ஆகி யோரை ஆதரித்து வாக்கு சேகரிக்க உள்ளார்.

பின்னர் பொதுக்கூட்டத்தை முடித்து கொண்டு பிரதமர் மோடி மீண்டும் கோவை விமான நிலையம் சென்று டெல்லி திரும்புகிறார்.

பொதுக்கூட்டத்தையொட்டி கொடிசியாமைதானத்தில்பிரமாண்டமான பொதுக்கூட்ட மேடை அமைக்கப்பட்டு வருகிறது. இதுதவிர பொதுமக்கள் அமரும் வகையில் இருக்கைகள் வசதி, குடிநீர், கழிப்பறை, வாகனங்கள் நிறுவதற்கு வாகன நிறுத்தும் இடவசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.



பொதுக்கூட்டத்தில் பா.ஜனதா, அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், தொண்டர்கள் என பல்லாயிரக்க ணக்கானோர் பங்கேற்க உள்ளனர்.

3 ஆயிரம் போலீஸ் பாதுகாப்பு

பிரதமரின் வருகையையொட்டி கோவையில் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது. மாநகர் முழுவதும் 3 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் முழுவதும் மத்திய பாது காப்பு படையின் கட்டுப்பா ட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மத்திய பாதுகாப்பு படையினர் அங்கு தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படையினரும் கோவைக்கு வந்துள்ளனர். அவர்கள் கோவை விமான நிலையத்தில் இருந்து கூட்டம் நடக்கும் மைதானம் உள்பட பல இடங்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மாநகரில் உள்ள அனைத்து சோதனை சாவடிகளிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வழியாக மாநகருக்குள் வரக்கூடிய அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்கு பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். மாநகரில் உள்ள பஸ் நிலையங்கள், ரெயில் நிலையம் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் பகுதிகளிலும் போலீஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

டிரோன்கள் பறக்க தடை

பிரதமர் வருகையை முன்னிட்டு கோவையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள சிவப்பு மண்டல பகுதிகளுடன், அவினாசி சாலை, ஹோப்ஸ், கொடிசியா, பீளமேடு, சித்ரா, காந்திமாநகர், சிங்காநல்லூர், நேருநகர், எஸ்.ஐ.எச்.எஸ் காலனி, சின்னியம்பாளையம், காளப்பட்டி, நீலாம்பூர், இருகூர் ஆகிய பகுதிகளில் சிவப்பு மண்டல பகுதிகளான அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில் இன்று மாலை 5 மணி முதல் நாளை மறுநாள் மாலை 5 மணி வரை டிரோன்கள் பறக்க தடைவிதிக்கப்படுகிறது. தடையை மீறி பறக்க விடுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கிடையே இன்று பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர். பிரதமர் வரும் போது அவரை எப்படி அழைத்து செல்வது என்பது உள்பட பல்வேறு ஒத்திகையில் அவர்கள் ஈடுபட்டனர்.

சட்டசபை தேர்தல் நாள் அன்று

ஊழியர்களுக்கு விடுமுறை வழங்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

சென்னை தொழிலாளர் ஆணையர் அறிக்கை

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 135(பி)–ன் கீழ் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானத் தொழில் உள்ளிட்ட அனைத்து அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தேர்தல் நடைபெறும் நாளான வருகிற 23–ந்தேதி (வியாழக்கிழமை) வாக்களிக்க ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும். தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது குறித்து புகார் அளிக்க தொழிலாளர் துறை சார்பில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அலுவலர் மற்றும் உறுப்பினர்களான சென்னை தொழிலாளர் இணை ஆணையர் ரமேஷ், தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) பி.ஷோபனா, கே.பழனி, எஸ்.சிவக்குமார் ஆகியோரைத் தொடர்பு கொண்டு தங்களது புகார்களைத் தெரிவிக்கலாம் என்று சென்னை தொழிலாளர் ஆணையர் தெரிவித்து உள்ளார்.

சென்னையில் விஜய் பிரசாரத்தின்போது

2 கைகளையும் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டியவருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம்

போக்குவரத்து போலீசார் நடவடிக்கை

சென்னை, ஏப். 17–

சென்னையில் நேற்று முன்தினம் த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். கோட்டூர்புரம் பகுதியில் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டபோது அவரது வாகனத்தில் முன்னே 2 கைகளையும் விட்டுவிட்டு உற்சாகமாக ஒரு நபர் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றார்.

இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியானது. இதனைப் பார்த்த கோட்டூர்புரம் போக்குவரத்து போலீசார் அந்த நபர் யார் என்பதை கண்டுபிடித்தனர்.

அவரது பெயர் மனு குமார் என்பது தெரியவந்தது இதைத்தொடர்ந்து அவருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. போலீசார் அவரிடம் விசாரணை நடத்திய போது விஜய்யை பார்த்த உற்சாகத்தில் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி மோட்டார் சைக்கிளை ஓட்டியதாக தெரிவித்துள்ளார். ஆனால் வீடியோ காட்சிகள் காரணமாக அவர் போலீசில் சிக்கி அபராதம் கட்ட நேரிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண்.478/2025

இந்திய வாரிசுரிமை சட்டம் XXXIX/1925 தொடர்பான மனுவில் 19.4.2016 அன்று இறந்து போன D. கோதண்டன் @ D.கோதண்டராமன் அவர்களின் வாரிசுரிமை கோரும் மனு

R.கலையாசி,
க/பெ. D.காலஞ்சென்ற கோதண்டன் @ D.கோதண்டராமன்,
கதவு எண். 18, ஜீவரத்தினம் தெரு,
தண்டயார்பேட்,
சென்னை–600081.
...மனுதாரர்

சென்னை–600054. ஆவடி. T.N.H.B. L.I.G–2 எண்.3695, என்ற முகவரியில் வசித்து வந்து 19.4.2016 அன்று இறந்து போன D. கோதண்டன் @ D.கோதண்டராமன் அவர்களின் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 27.4.2026 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறார்கள். 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

மு.அருள்ராஜ்.
மனுதாரரின் வழக்கறிஞர்
எண்–21, லா சேம்பர்,
சென்னை உயர் நீதிமன்றம் வளாகம், சென்னை–600104.

S . கண்ணன்,
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு –1,
உயர்நீதிமன்றம், சென்னை –600104.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்
சோழிங்கநல்லூர்
I.A.No.1 of 2025
in
O.S.No.383 OF 2017

Mr.T.T.K.Duraisingam
...Petitioner/Plaintiff
–Vs–
Mr.Methew Manojikumar
...Respondent/Defendant

எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடைசியாக தெரிந்த முகவரி

To:–
Mr.Methew Manojikumar,
Father's name not known to the plaintiff, Plot No. 1A, Brindavanam Garden 1st main road,
Okkiyampettai, Chennai–600 097.

இதன் மூலம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மனுதாரர்/வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 2.6.2026 அன்று வாய்தா போடப்பட்டு உள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்
சோழிங்கநல்லூர்
I.A.No. 1 of 2024
in
O.S.No.779 OF 2024

Mr.Muthu & others
...Petitioner/Plaintiff
–Vs–
Mr.Kannan & others
...Respondents/Defendants

1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடைசியாக தெரிந்த முகவரி

To:–
R1.Mr.Kannan, S/o.Thulasi Naicker,
No.1/270, Thanthai Periyar Street,
Injambakkam, Chennai – 600 115.

இதன் மூலம் 1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மனுதாரர்/வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 2.6.2026 அன்று வாய்தா போடப்பட்டு உள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்

மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றம் முன்பாக
ஏ.எஸ்.எண். 17/2025

மாரியப்பன்
... மேல்முறையீட்டாளர்/வாதி
(எதிர்)
P.T.சுராஜ்,
த/பெ திருநாவுக்கரசு,
பிளாட் எண். 15 நம்பர் 274
பல்லவன் நகர், முதலாவது அவென்யூ,
திருவேற்காடு, சென்னை.
... எதிர்மேல்முறையீட்டாளர்/
பிரதிவாதி

பொது விளம்பரம்

இந்த மேல்முறையீட்டாளர் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.157/2019 என்ற நம்பரில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு மேல் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்து, மேல்முறையீட்டில் எதிர் மேல்முறையீட்டாளருக்கு பலமுறை படி கட்டி சம்மன் அனுப்பியும் அவர் ஆஜராகாத காரணத்தினால் அவரை பொறுத்து பேப்பரில் விளம்பரம் செய்ய உத்தரவாகி வாய்தா 04-06-2026 தேதி காலை 10.30 மணிக்கு போடப்பட்டுள்ளது என்பதையும் அன்றைய தினம் ஆஜராகாவிடில் எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

K. இளையராஜா, MSc., BL.,
வழக்கறிஞர்,
மயிலாடுதுறை.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்
சோழிங்கநல்லூர்
I.A.No.1 of 2024
in
O.S.No.647 OF 2024

Mr.S.Haridoss
...Petitioner/Plaintiff
–Vs–
Mr.Kannan & others
...Respondents/Defendants

1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடைசியாக தெரிந்த முகவரி

To:–
R1.Mr.Kannan, S/o.Thulasi Naicker,
No.1/270, Thanthai Periyar Street,
Injambakkam, Chennai – 600 115.

இதன் மூலம் 1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மனுதாரர்/வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 2.6.2026 அன்று வாய்தா போடப்பட்டு உள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்

PUBLIC NOTICE

Notice is hereby given to the public at large that (1) Mrs. Kanniga, (2) Mr. A. Ramesh, (3) Mr. A. Suresh, (4) Mr. A. Sundar, (5) Mr. A. Kannan, (6) Mrs. A. Sudha, (7) Mr. Karunamurthy, (8) Mrs. K. Mahalakshmi, (9) Mrs. K. Mythili, (10) Mr. K. Dinakaran, (11) Mrs. L. Prema, (12) Mrs. L. Sahana, (13) Mr. L. Pavithran are the absolute Title Holders of immovable property namely Land measuring 2389.58 Square Feet and Residential Building constructed therein situated at Town Survey No. 139/2 (Old Survey Nos. 206/3 Part, 206/3B Part), Block No. 42, Virugambakkam Town (Formally Virugambakkam Village), Mambalam Taluk, Chennai District.

It is proposed that the above referred immovable property will be purchased by my Clients through a Registered Sale Deed to be executed by the above referred Title Holders.

Any peron(s) having any claim, right, Title, Interest, objections or encumbrances upon the said Property or the proposed Transfer is hereby requested to contact the undersigned or raise their objections, if any, in writing within 10 days from the date of publication of this Notice. Failing which the transfer shall be competed, and such claims, if any, shall be deemed to have been waived.

S. Arun, Advocate, Chennai
Shop No. 4, 1st Floor, S.K. Complex,
Mannivakkam, Chennai – 600 048.
Place : Chennai,
Date : 16-04-2026

IN THE COURT OF PRINCIPAL SUB JUDGE AT CHENGALPATTU
R.A.No.5/2025 In O.S.No. 139/2014

A.Prabhanandham
.....Petitioner/Plaintiff
–Vs–
A.Seshalaxmi and Another
...Respondents/Defendants

To:
R1.A.Seshalakshmi W/o.Anandha Raman, No.7/2 B.C.G Staff Quarters, Guindy, Chennai–600032
R2.J.Jayakumar S/o V.Javaraman No.5B, EVR Street, Periyar Nagar, Nesapakkam, Chennai–600078

இதனால் தங்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி மனுதாரர் மேற்படி மனுவினை வழக்கில் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை திரும்ப பெற வேண்டி தங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். இது சம்மந்தமாக மனுதாரர் தங்களுக்கு பல முறை சம்மன் அனுப்பியும் தாங்கள் பெற்றுக்கொள்ளாமல் அவரை அலகழித்து வருகிறீர்கள். ஆகவே இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்து கொள்வது என்னவென்றால் மேற்படி மனுவானது வரும் 30.4.2026 தேதி அன்று விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்களோ அல்லது தாங்கள் உத்தரவு பெற்ற வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்கண்ட மனுவானது மனுதாரருக்கு சாதகமாக அனுமதிக்கப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்து கொள்கிறோம்.

C.V.SUBASHBABU, Advocate

மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம், மதுரை
O.S.No.79/2025

T.ஷாமில் உசேன், த/பெ.தல்வார் உசேன், 243/53, பொன்மேனி மெயின் ரோடு, சம்மட்டிபுரம், மதுரை–16
–மனுதாரர்
–/எதிரிடை/–
K.ஷிரின்பானு (எ) யாஸ்மின், க/பெ.ஷாமில் உசேன், 4/33, மசூதி தெரு, புளியமேடு, சென்னை–17.
–எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்திருக்கும் வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர் ஆஜராக 23.04.2026–ம் தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. சமூகம் கோர்ட்டில் தாங்கள் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனைய தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

T.ஷாமில் உசேன்,
மனுதாரர், மதுரை

ஏசியன் பெயிண்ட்ஸ் புதிய பிரசாரம்

ஏசியன் பெயிண்ட்ஸ் தண்ணீர்ப்புகா துறையில் தனது ஈரத்தடுப்பு தீர்வான "டேம்ப் ப்ரூஃப்"–ஐ தென் இந்திய சினிமா வீடுகளுக்கான சூப்பர் ஸ்டாராக நிலை நிறுத்தும் புதிய பிரசாரத்தை "Rowdy Baby" இசையுடன் அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த பிரசாரம், வீடுகளின் மொட்டைமாடிகள் மற்றும் அன்றாட வாழ்விடங்களில் ஏற்படும் கசிவு மற்றும் வெப்பம் அதிகரிப்பு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாக உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் சோழிங்கநல்லூர்
I.A.No.1 of 2024
in
O.S.No.148 OF 2012

Sree Angala Parameswari Temple
Situated at 3rd Main Road,
Karpaga Vinayagar Nagar,
Okkiam Thoraipakkam Village,
Vettuvankeni, Chennai–600041
Rep. by its President MR.T.Kalaiarasan
S/o. R.Thambusamy
Residing at No.2/1514, 18th Cross Street,
Vettuvankeni, Chennai–600 041.
....Petitioner/Plaintiff
–Vs–
Mrs.Jayalakshmi & another
...Respondents/Defendants

எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடைசியாக தெரிந்த முகவரி

To:–
R1.Mrs. Jayalakshmi
R2.Mrs. Chitra W/o. Muthu
Residing at Mahathma Gandhi Nagar,
Okkiam Thoraipakkam,
Chennai–600 097

இதன் மூலம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மனுதாரர்/வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 2.6.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்

த வெல்த் கம்பெனி முதலீட்டு திட்டம்

பேண்டோமேத் குழுமத்தின் ஒரு அங்கமான 'த வெல்த் கம்பெனி மியூச்சுவல் ஃபண்டு' தனது புதிய சிறப்பு முதலீட்டு நிதியான (SIF) 'WSIF'-ஐ இரண்டு தனித்துவமான முதலீட்டுத் திட்டங்களுடன் அறிமுகப்படுத்துவதை பெருமிதத்துடன் அறிவித்துள்ளது. 'WSIF ஈக்விட்டி லாங்–ஷார்ட் ஃபண்டு' மற்றும் 'WSIF ஈக்விட்டி எக்ஸ்–டாப் 100 லாங்–ஷார்ட் ஃபண்டு' ஆகிய இந்த இரண்டு திட்டங்கள் மூலம் முதலீட்டுத் துறையில் ஒரு புதிய பிரிவில் இந்நிறுவனம் கால் பதிக்கிறது. புதிய நிதி வெளியீடு (NFO) ஏப்ரல் 15, 2026 அன்று தொடங்கி ஏப்ரல் 29, 2026 அன்று முடிவடைகிறது என்று நிறுவனர் மது லுனாவத், தலைமை முதலீட்டு அதிகாரி சின்மய் சாத்தே கூறினர்.

பின்தங்கிய சிறுமிகளுக்குத் தடுப்பூசி



அனைவருக்கும் சமமான உடல்நலப் பராமரிப்பு வசதி கிடைப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், பாண்டிச்சேரியில் உள்ள ST மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவரான டாக்டர் எஸ்.முகுந்தன், பின்தங்கிய சிறுமிகளுக்காக சின்னம்மை தடுப்பூசி செலுத்தும் ஒரு சிறப்பு இயக்கத்திற்கு சமீபத்தில் ஆதரவளித்தார். இந்தச் செயல்பாடு, நோவோமெடி சயின்சஸ் நிறுவனத்தின் G.A.U.R.I. - (பின்தங்கிய சிறுமிகளின் நோய்த்தடுப்புக்கான உரிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்) முன்னெடுப்பின் கீழ், CRY (குழந்தைகள் உரிமைகள் மற்றும் நீங்கள்) அமைப்பின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது.

கோகோகோலா புதிய பிரசாரம்

கோகோகோலா "Har Meal Aaaah" விளம்பரத்தின் மூலம் தனது தனித்துவமான மாயாஜாலத்தை ஒவ்வொரு மேசைக்கும் கொண்டு வருகிறது. நடிகை மமிதா பைஜு நடித்துள்ள இந்த விளம்பர திரைப்படம், விருப்பமான உணவை கோகோகோலாவுடன் இணைத்து சாப்பிடுவதில் உள்ள மகிழ்ச்சியை படம் பிடித்து காட்டுகிறது. கோகோகோலா உணவு நேரங்களை "Aaaah" என வியக்க வைக்கும் அனுபவங்களாக மாற்றுகிறது என்று கோகோகோலா இந்தியா– தென்மேற்கு ஆசியா சந்தைப்படுத்தல் மூத்த இயக்குநர் கார்த்திக் சுப்ரமணியன், Studio X கோகிரியேட்டிவ் லீட் கௌதம் பாசின் கூறினர்.

படிவம் G

சென்னை மற்றும் கேரளாவில் செயல்பட்டு வரும் அன்னம் ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

(தேசிய கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை வாரிய (பெருநிறுவன நபர்கள் நொடிப்பு நிலை செயல்முறை தீர்மானம்) ஒழுங்கு விதிகள், 2016ன் ஒழுங்கு விதி 36A (1)ன் கீழ்)

வ எண்	தொடர்புடைய தகவல்கள்	
1	கார்ப்பரேட் கடனாளர் பெயர் மற்றும் PAN மற்றும் CIN/ LLP	அன்னம் ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் CIN :U27106TN2000PTC046300, PAN: AADCA8020G
2	பதிவு அலுவலக முகவரி	பதிவு அலுவலகம் (MCA பதிவுகளின்படி): எண்.5, பாலாஜி தெரு, அசோக் நகர், கோடம்பாக்கம், சென்னை, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு, இந்தியா, 600024. பிற அலுவலகங்கள்: 1. எண்.244, TH ரோடு, தண்டையார்பேட்டை, சென்னை 600 081 2. 11/40E, பேஷன் டவர், செரூட்டி ரோடு, கோழிக்கோடு, கேரளா 673001
3	இணையதள URL	www.annamsteels.com
4	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	கிடைக்கப்பெற்ற பதிவுகளின்படி நிலையான சொத்துக்கள் ஏதுமில்லை
5	முக்கிய தயாரிப்புகள்/ சேவைகளின் நிறுவல் திறன்	பொருந்தாது
6	கடந்த நிதியாண்டில் விற்கப்பட்ட முக்கிய தயாரிப்புகள் / சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு	2021 முதல் எவ்வித வணிகச் செயல்பாடுகளும் இல்லை
7	பணியாளர்கள் / ஊழியர்களின் எண்ணிக்கை	ஊழியர்கள்/தொழிலாளர்கள் இல்லை
8	இரண்டு ஆண்டுகளின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடனாளர்களின் பட்டியல் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் IBBI இணையதளத்தில் கிடைக்கின்றன:	முழுமையான விவரங்களுக்கு: annamsteelirp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும் அல்லது www.annamsteels.com என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்
9	குறியீட்டு பிரிவு 25(2)(h)–ன் கீழ் தீர்மான விண்ணப்பதாரர்களுக்கான தகுதி URL இல் கிடைக்கும்:	முழுமையான விவரங்களுக்கு: annamsteelirp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும் அல்லது www.annamsteels.com என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்
10	விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கடைசி தேதி	16.05.2026
11	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	18.05.2026
12	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	23.05.2026
13	வருங்காலத் தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி	26.05.2026
14	தகவல் குறிப்பாணை, மதிப்பீட்டு மேட்ரிக்ஸ் மற்றும் வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்வு திட்டங்களுக்கான கோரிக்கைக்கான கடைசித் தேதி	28.05.2026
15	தீர்மானத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	27.06.2026
16	விருப்ப கருத்துருவை சமர்ப்பிதற்கான மின்னஞ்சல் முகவரி	annamsteelirp@gmail.com

முக்கியமான குறிப்பு:
கார்ப்பரேட் கடனாளியான M/S. அன்னம் ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறையானது (CIRP), 26.11.2025 தேதியிட்ட CP(IB)/208(CHE)/2023–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தொடங்கப்பட்டது. மேற்கண்ட உத்தரவானது இடைக்காலத் தீர்வு நிபுணரால் 10.12.2025 அன்று பெறப்பட்டது. நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை சட்டம் (IBC) 2016–ன் பிரிவு 12(1)–ன் படி, 180 நாட்கள் 25.05.2026 அன்று முடிவடைகிறது. எனினும், IRP மூலம் CIRP தொடக்க உத்தரவைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் காலம் விலக்கப்படும் பட்சத்தில், 180–வது நாள் 08.06.2026 வரை நீட்டிக்கப்படும். மேலும், கடன் வழங்கியவர்கள் குழுவின் (CoC) ஒப்புதலுடன், IBC 2016–ன் பிரிவு 12(3)–ன் கீழ் CIRP காலத்தை மேலும் 90 நாட்களுக்கு நீட்டிக்கக் கோரி மாண்புமிகு NCLT முன்பு விண்ணப்பம் தாக்கல் செய்யத் தீர்மான நிபுணருக்கு அதிகாரம் அளிக்கப்படலாம். அதன்படி, படிவம் G–ன் செல்லுபடியாகும் தன்மையானது, IBC 2016–ன் பிரிவு 12(3)–ன் படி CIRP காலத்தை நீட்டிப்பது தொடர்பான மாண்புமிகு NCLT–ன் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

தேதி: 17.04.2026
இடம்: சென்னை

அன்னம் ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக
மாத்தூர் சபாபதி விஸ்வநாதன்
இடைக்காலத் தீர்மான நிபுணர்
IBBI/IPA–001/IP–P00674/2017–2018/11148
மனை எண் 22, வள்ளலார் தெரு, நிலமங்கை நகர், ஆதம்பாக்கம், சென்னை – 600088

Annexure 25

IndusInd Bank Limited

Registered Office: Indusind Bank Limited, 2401 Gen, Thimmayya Road (Cantonment), Pune – 411 001, India.
Corporate Office: Indusind Bank Limited, One Indiabulls Centre, Tower, 8th Floor, 841 Senapati Bapat Marg, Elphinstone Road(W), Mumbai
Branch Office: IndusInd Bank, Adyar Branch, New no 58 Old No. 20 Shastri Nagar Adyar Chennai - 600020.

PUBLIC NOTICE

As per RBI guidelines dated DOR.LEG.REC/40/09.07.005/2021-22, this public notice is hereby given as there are rental outstanding on the following safety deposit lockers located at the Adyar branch of IndusInd Bank Limited, having its Registered, Corporate and Branch offices as stated above.

Sr. No.	Branch Name	Locker No.	Name of Hirer	Rental Outstanding/Overdue since	Inoperative since
1	Adyar	LK8	CHITRA DEVI / GOKULNATH	Rs. 49560 – 156 Months	156 Months
2	Adyar	LK 15 / unit I	S GUNASEKARAN / G AMUTHA	Rs.31270 - 180 Months	180 Months
3	Adyar	LK 17 / unit I	S GURUMURTHY/ N RAMALINGAM	Rs.35400 - 204 Months	204 Months
4	Adyar	LK18 / unit II	K CHANDRA EKARAN	Rs.20060 – 132 Months	132 Months
5	Adyar	LK21/ unit I	JUSTIN GERALD	Rs.37760 - 108 Months	108 Months
6	Adyar	LK43 unit III	VIVEK KEJRIWAL / SUPRIYA AGRAWAL	Rs.19470 - 144 Months	144 Months
7	Adyar	LK 49 unit III	SUMIT KUMAR PANDEY / YASHWANTHI PANDEY	Rs.37760 - 204 Months	204 Months
8	Adyar	LK 58 / unit II	VIJAYAPANDI S	Rs.18880 - 108 Months	108 Months
9	Adyar	LK72 / unit III	KALA SUDHAKAR / AKILA	Rs.49560 – 132 Months	132 Months
10	Adyar	LK114	CHERAN R	Rs.70800 – 120 Months	120 Months
11	Adyar	LK45	AVILA PIGEON EDWARD	Rs.16520 – 84 Months	84 Months
12	Adyar	LK30	ANAND N SWAMY / USHA RAMANI	Rs17700- 72 Months	72 Months

IndusInd Bank has served due notice through registered post about the arrears of rent to the above mentioned individuals, twice at the address as registered with the Branch.

As per the Terms and Conditions of the Locker Agreement, IndusInd Bank Ltd is proposing to open the safety deposit lockers after **14 days** from the date of this notice, to take custody of the locker contents on account of the rent being overdue and unpaid for three consecutive years.

IndusInd Bank Ltd will not be responsible in any manner to any person for the sale of the contents of the lockers after the said notice period.

Place: CHENNAI
Date: 17/04/2026